பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 18 புதன்கிழமை 01.02.2023 கதிர் 85

### இனி இது ரகசியம் அல்ல!

இது தேர்தல் காலம். அதனால் எதையாவது சொல்லி மக்களின் கண்களைக் கட்டி வாக்குகளைப் பெறுவதில் ஒவ்வொருவரும் தீவிரமாக இருக்கின்றனர். அதற்காக மக்களை முட்டாள்கள்

☞2

# ரணிலின் வலையில் சிக்கி தமிழர்களே ஏமாறாதீர்கள்!



## ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார எச்சரிக்கை

**அரசியல் தீர்வு என்ற பெயரில் தமிழ்ப் பிரதிநிதிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்து ஒட்டுமொத்த தமிழினத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏமாற்ற முயற்சிக்கின்றார். ரணிலின் இந்தச் சதி வலையில் சிக்கி ஏமாற வேண்டாம் என்று தமிழ் மக்களிடமும், அவர்களின் பிரதிநிதிகளிடமும் ஜே.வி.பி. கேட்டுக்கொள்கின்றது.**

**- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க ‘காலைக் கதிர்’ பத்திரிகையிடம் தெரிவித்தார்.**

☞2

## மாகாண சபை முறையை ஜேவிபி இனி எதிர்க்காது

### அதன் தலைவர் தெரிவிப்பு

மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உள்ளதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். அந்த நேர்காணலில் அவர் தெரிவித்த முக்கியமான விடயங்கள் வருமாறு:

சர்வக்கட்சிக் கூட்டம்

தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் விடயத்தில் அரசாங்கத்திற்குள் கருத்து வேறுப்பாடு காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மாறுப்பட்ட நிலைப்பாடுகளில் உள்ளார்கள். ஆகவே தீர்வு

☞2

## தேசிய கீதம் பாடுவதற்கு மட்டும் ஒரு கோடி ரூபா

### சுதந்திரதின செலவுக் கணக்கு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் பாடுவதற்கு மாத்திரம் ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினக் கொண்டாட்டம் தொடர்பான கூட்டம் இதை ஏற்பாடு செய்யும் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது. சுதந்திர தின நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அனைவரும் இந்தக்

☞2

## சுதந்திர தின கொண்டாட்டம் 3,250 அதிதிகளுக்கு அழைப்பு

### நிகழ்வைப் புறக்கணிக்க சஜித், அநுர, சம்பந்தன் முடிவு

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 3 ஆயிரத்து 250 அதிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிதிகளும் அடங்குகின்றனர்.

இதில் உள்நாட்டு அரசியல் தலைவர்கள் பலர் கலந்துகொள்கின்ற போதிலும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று அறியமுடிகின்றது.

☞9

## ராஜபக்ஷ - ரணில் கூட்டே நாடு சீரழியக் காரணம்

### திருக்கோவிலில் சஜித் விளாசல்

(வி.ரி.சகாதேவராஜா)

நாடு சீரழிவதற்கு ராஜபக்ஷ ரணில் கூட்டுக் கம்பனியே காரணம் என்று சாடிய ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாச, தம்பட்டை ஆடைத் தொழிற்சாலை மீளத் திறக்கப்பட்டு இளைஞர்கள் யுவதிகளுக்கு

☞2



## மைத்திரி கோரிய மன்னிப்பை ஒருபோதும் ஏற்கவே முடியாது!

### கத்தோலிக்க திருச்சபை தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிய மன்னிப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

சமூக தொடர்புக்கான தேசிய கத்தோலிக்கப் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தபோது இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில்

☞9

## வழக்கமான சோதனைக்காகவே சம்பந்தன் வைத்தியசாலையில்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைத்தியர்களின் ஆலோசனையின் பிரகாரம், மருத்துவக் கண்காணிப்புக்காகக் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

வழமையான பரிசோதனைக்காகவே

☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நினைத்துக்கொண்டு அர்த்தமற்ற கதைகளைச் சொல்லக்கூடாதில்லையா.....!

அண்மையில் புளொட் அமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் இந்த மாதிரியான கதை ஒன்றை அவிழ்த்துவிட்டிருக்கின்றார். விடுதலைப் புலிப் போராளிகளைக் கீழ்மைப்படுத்துகிறார்கள் என்று எதிர்த் தரப்பினரை அம்பலப்படுத்தினால் மக்களிடம் வாக்குகளைக் கவர்ந்துவிடலாம் என்கிற, காலம் காலமான கீழ்த்தர உத்தியோடு அவர் தனது கருத்து முத்துக்களை உதிர்த்திருக்கிறார்.

அவர் சொன்னதன் சாராம்சம் இதுதான். "போராட்டத்தில் ஆயுதம் ஏந்தாததையே தமது அரசியல் தகுதியாக ஒரு தரப்பினர் சொல்லுகிறார்கள். ஆயுதம் தூக்கிய போராளிகளுக்குத்தான் அரசியலுக்கு வரத் தகுதி இருக்கின்றது." நான் இங்கே குறிப்பிட்டிருப்பவை அவரது நேரடியான வார்த்தைகள் அல்ல. அவர் இது பற்றி நீட்டி முழக்கியிருக்கிறார். அதனை இரத்தினச் சுருக்கமாக வாசகர்களுக்குத் தருவதற்காக என்னுடைய வார்த்தைகளில் அவரது உரையின் பொழிப்பைத் தந்திருக்கிறேன். ஆனால், அவர் சொல்ல வந்த கருத்தில் மாற்றமில்லை.

கஜதீபன் ஒன்றை மறந்துவிட்டார். அவருக்கு அரசியல் வாய்ப்புக் கிடைத்ததே கட்சிகள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றியதால்தான். ஆயுதம் தூக்கியவர்களுக்குத்தான் அரசியலிலும் இடம்கொடுக்கவேண்டும் என்று அவரது கட்சியான புளொட்கூட நினைத்ததில்லை. அப்படியிருந்திருந்தால், புளொட்டில் ஆயுதம் தூக்கிப் போராடிய எத்தனையோ பேர் இருக்க ஏன் தமிழ் அரசுக் கட்சியில் இடம் கிடைக்கவில்லை என்றதும் புளொட்டிடம் ஓடி வந்த கஜதீபனுக்கும் தர்சானந்துக்கும் புளொட் இடம் கொடுத்தது?

புளொட் ஒரு ஆயுத இயக்கம். மக்களுக்காகப் போராடியது – மக்களை மிதித்து சதிராடியது என்று இரண்டு முகங்களையும் கொண்ட ஆயுத இயக்கம். அந்த இயக்கத்தில் ஆயுதம் தூக்கியவர்களுக்குப் பஞ்சம் என்றா தமிழ் அரசுக் கட்சியிலிருந்து இடம்கிடைக்காது வந்த ஆயுதத்தைத் தொட்டுக்கூடப் பார்த்திராதவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட அந்த இயக்கம் இடம்கொடுத்தது?

அடுத்தவர்களைக் குறைகூறி அவர்களின் செயல்களை மட்டம்தட்டி அதன் மூலம் வெற்றியைப் பெறமுடியும் என்று நினைப்பதற்கு முன்னர் அந்தக் குறைகள் நம்மிடமும் இருக்கின்றனவா என்பதை ஒரு தரம் சிந்திப்பது நல்லது.

போர் முடிந்த கையோடு, அதுவரையில் கதாநாயகர்களாகத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை தீண்டத்தகாதவர்களாகப் பார்த்ததை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் செய்தது. அதற்காக நாம் அனைவரும் வெட்கப்படவேண்டும். அவர்களின் இளம் வாழ்க்கையை எமக்காகத் தொலைத்து, போருக்குப் பின்னர் என்ன செய்வது என்று வழிதெரியாது நின்றவர்களை அரவணைத்து, நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கவேண்டிய பெண் போராளிகளை அநாதரவாக விட்டதுடன் மட்டுமல்ல புறம்பேசியும் திரிந்தவர்கள் நாம். அதற்காக ஒவ்வொருவரும் எம்மை நாமே சவுக்கால் அடித்துக் கொள்ளவேண்டும்.

அப்போதெல்லாம் சும்மா இருந்துவிட்டு, அந்த அநீதிக்கு எதிராக குரலைக்கூட உயர்த்தாமல் இருந்துவிட்டு தேர்தல் என்று வந்ததும் நீதிமான்கள் மாதிரி கருத்துக்கூறிக்கொண்டுவருவது கேலமான சந்தர்ப்பவாத அரசியல் தவிர வேறென்ன..? இனியாவது போராளிகளையும் அவர்களின் தியாகங்களையும் அவர்களின் அர்ப்பணிப்பு வாழ்க்கையையும் அவரவர் சுயநல அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டால் அதுவே அவர்களுக்குச் செய்யும் பெரும் உதவி.

போருக்குப் பின்னரான நெருக்கடியிலிருந்து இந்தச் சமூகம் பேருதவி செய்து அவர்கள் மீண்டுவரவில்லை. இன்றைய அவர்களின் வாழ்க்கையை அவர்களேதான் செதுக்கிக்கொண்டார்கள். அதுபோலவே எதிர்காலத்தில் அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் உண்மையான போராளிகள் தாமாகவே செதுக்கிக்கொள்வார்கள். போலி ஆதரவின் பெயரால் அவர்களை அழுத்தி அகற்றிவிடாமல் இருந்தால் அதுவே நாம் அனைவரும் அவர்களுக்குச் செய்யக்கூடிய பேருதவி.

- இடிமின்னல் -

## ரணிலின் வலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி கதிரையில் அமர்த்தப்படுள்ள ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் வீட்டுக்கு அனுப்பியே தீருவோம்.

ரணிலை விரட்டும் ஜனநாயகப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் கட்சி பேதமின்றி இணைய வேண்டும்.

மக்கள் ஆணை இல்லாமல் ஜனாதிபதியாகிய ரணிலை நம்ப வேண்டாம் என்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊழல், மோசடி இல்லாத கட்சி ஜே.வி.பியே. எனவே, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் நாம் நாடு தழுவிய ரீதியில் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஜே.வி.பியின் ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குக் காலத்தை இழுத்தடிக்காமல் தீர்வை நாம் வழங்குவோம்.

ரணில் தலைமையிலான அரசுக்குப் பாடம் புகட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. தேர்தல் உரிய திகதியில் நடத்தப்பட வேண்டும். மக்கள் தங்கள் வாக்குகளால் இந்த அரசுக்குப் பதிலடி வழங்க வேண்டும் – என்றார்.

## ராஜபக்ஷ - ரணில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கிழக்கு மாகாண முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை திருக்கோவிலில் இடம்பெற்ற போது அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்னும் மின்சார கட்டணத்தினை அதிகரிக்க எத்தனிக்கும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற மறுத்து இந்த நாட்டை பொருளாதார ரீதியிலே பின்னடையச் செய்வதை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை .எனவே இந்த அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

நான் செய்யும் அத்தனை வேலை திட்டங்களும் ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ அமைச்சராகவோ இருந்து செய்யவில்லை. சேவை செய்வதற்கு பதவி ஒரு பொருட்டல்ல. சிறந்த மனப்பான்மை மாத்திரம் இருந்தால்போதும் அதனைச் செய்ய முடியும். நாங்கள் அதைச் செய்து காட்டியிருக்கிறோம் ஆட்சிக்கு வந்தவுடன் இன்னும் அதிகமாகச் சேவை செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, மக்களைப் பிழையாக வழிநடத்தி, இந்த நாட்டுக்கு சம்பந்தம் இல்லாத இந்த நாட்டை நேசிக்காத இந்த நாட்டை வழிநடத்த முடியாத ஒருவரை ஜனாதிபதியாக தேர்வு செய்தனர். கயவர்களின் சூழ்ச்சிக்கு ஆளாகியதால் கோட்டாபய போன்ற ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்தனர்.

இன்னுமொருமுறை அப்படிப்பட்டவர்களையும் அவர்களுடன் சேர்ந்தவர்களையும் ஆட்சியேற விட்டீர்கள் என்றால் ஏற்கனவே அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் நாட்டை காப்பாற்ற முடியாது. நாட்டை நேசிக்காத அத்தகையவர்களுடைய பேச்சுக்களுக்கு, கவர்ச்சிகரமான வாக்குறுதிகளுக்கு இடமளித்து நாட்டை இன்னும் ஒரு படி பாதாளத்தை தள்ளிவிடாதீர்கள்.

இம்முறை இந்த ஊராட்சி மன்ற தேர்தலிலே நாங்கள் முதன் முறையாக ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக டெலிபோன் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகிறோம். இலங்கை முழுவதுமாக வெற்றி வாகை சூடுவோம் .எனவே எதிர்வரும் மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி டெலிபோன் சின்னத்துக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் நீங்கள் வாக்களிக்க வேண்டும் – என்றார்.

தனது தந்தை உருவாக்கிய ஆடைத் தொழிற்சாலை தம்பட்டையில் இடைநடுவில் செயற்படாமல் நிற்கிறது. அதனை மீண்டும் கட்டி எழுப்பி இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றும் அவர் உறுதியளித்தார். இந்த பிரதேசத்தில் காணப்படக்கூடிய கனிய வளங்களில் ஒன்றாகிய இல்மனைட் கனிய வளத்தினை அகழ்வதை தடுப்போம் என்றும் தெரிவித்தார்.

## தேசிய கீதம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கலாசார நிகழ்வுக்கு ஒரு கோடி 50 இலட்சம் ரூபா, தெற்கில் இருந்து வடக்கு வரையான சைக்கிள் சவாரிக்கு 2 கோடி ரூபா, சுதந்திர தினத்தைக் கண்டு கழிப்பதற்காக தெற்காசிய நாடுகளில் இருந்து வருகை தரும் அந்நாட்டுத் தலைவர்கள், அதிதிகள் உள்ளிட்டவர்களின் தங்குமிடம் உள்ளிட்ட செலவுக்காக ஒரு கோடி 90 இலட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இக்கொண்டாட்டத்தையொட்டி ஆயிரம் ரூபா பணம் ஆயிரம் வெளியிடுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. இதற்காக அவர்கள் கேட்டிருக்கும் செலவு 2 கோடி 20 இலட்சம் ரூபாவாகும்.

கொண்டாட்டத்தைப் பார்வையிடுவதற்காக வருபவர்கள் தாற்காலிகமாகத் தங்குவதற்காக அமைக்கப்படும் கூட்டாரங்களுக்கான செலவு 4 கோடி ரூபா.

அன்றைய தினம் தேசிய கீதம் பாடுவதற்கான செலவு ஒரு கோடி ரூபா. தேசிய கீதம் பாடும் சிறுவர்களின் பயிற்சி, ஆடை அலங்காரம், வாகன ஏற்பாடு உணவு உள்ளிட்ட விடயங்கள் இதற்குள் அடங்குகின்றன.

தேசிய கீதம் பாடுவதற்காகக் கொழும்பு பாடசாலைகளில் இருந்து 115 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் உருவச் சிலைக்குப் போடப்படும் மாலைகளுக்கான செலவு 97 ஆயிரத்து 500 ரூபாவாகும்.

## மாகாண சபை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் முதலில் அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசாங்கம் ஒன்றிணைந்து ஒரு தீர்வைமுன்வைத்தால் தேசியபிரச்சினை தொடர்பிலான பேச்சில் கலந்துகொள்வோம். ஜனாதிபதியின் ஊடகக் காட்சிப்படுத்தலில் கலந்துக்கொள்வது பயனற்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்காக அரசமைப்புச் சபையை உருவாக்கினார். 84 கூட்டங்கள் இடம்பெற்றன. குறைந்தபட்சம் புதிய அரசமைப்பு தொடர்பில் ஒருமுழுமையான வரைபைக்கூட அவர்

(09ஆம் பக்கம் பார்க்க)





காலைக்கதிர் Kalaikkathir

**'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு -077 307 8799**

காலைக்கதிர் Kalaikkathir

## பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடைகின்ற போதிலும்

# ஜனாதிபதி, பிரதமருக்கான ஒதுக்கீட்டில் வெட்டு இல்லை

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து நீடிக்கின்ற போதிலும் திறைசேரி ஜனாதிபதி பிரதமர் அலுவலகங்களுக்கும் அமைச்சுகளுக்கும் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

இலங்கை இன்னமும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சிக்குண்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்னரே தனது வரலாற்றில் முதல் தடவையாக வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது. தனது கடன்களைத் திருப்பி செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதிகரிக்கும் வரிகள் மற்றும் பொதுமக்கள் தங்கள் வாழ்க்கை தரத்தில் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ள அதிகரித்த வாழ்க்கை செலவீனம் போன்றவை காணப்படுகின்றன.

சமீபத்தில் அதிகரிக்கப்பட்ட வரிகள் திறைசேரிக்கு சிறிய நிம்மதியைக் கொடுத்துள்ளன. எனினும் ஜனாதிபதி பிரதமர் அலுவலகங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி பல பில்லியன்களாக காணப்படுகின்றது இவற்றில் குறைப்புகள் இடம்பெறவில்லை.

திறைசேரி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, ஜனாதிபதி பிரதமர் அலுவலகங்களுக்கும் அமைச்சுகளுக்கும் 2023 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி 2022 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை போன்றே காணப்படுகின்றது – அதே அளவிலானதாகக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் ஏன் பாரிய குறைப்புகள் இடம்பெறவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஜனாதிபதிக்கு 3.88 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது – 2022 இல் இந்த ஒதுக்கீடு 3.04 பில்லியனாகக் காணப்பட்டது. ஜனாதிபதிக்கு விசேட கொடுப்பனவுகளுக்காக 7 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதே தொகை ஒதுக்கப்பட்டது.

2023 இல் ஜனாதிபதியின் உள்நாட்டு வெளிநாட்டு பயணங்களுக்காக 86 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது, 2022 இல் இந்த தொகை 26 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பட்டதாரி ஆசிரிய நியமனத்துக்கு விண்ணப்பிக்கலாம்

அரச சேவையில் உள்ள 26 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

2018, 2019, 2020 ஆகிய காலப் பகுதிகளில் அரச சேவையில் இணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட 40 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் நாடளாவிய ரீதியில் இந்த ஆட்சேர்ப்பு பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாகாண பாடசாலைகளுக்கு மாகாண மட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்திலும் நேர்முகத்தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகள் மூன்று வருட சேவைக் காலத்தின் பின்னர் ஆசிரியர்களாக ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு 5 வருடங்கள் சேவை செய்வதற்கு விருப்பமான மாகாணத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்வுள்ளது.

அனைத்து விண்ணப்பங்களையும் எதிர்வரும் பெப்ரவரி 10 இற்கு முன் இணையம் மூலம் சமர்ப்பிக்கலாம்.



## வடக்கில் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்கின்றது இந்திய நிறுவனம்

வடமாகாணத்தில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக இந்தியாவின் பிரபல வி.ஜி.பி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோம் தலைமையிலான உயர்மட்ட குழு ஆராய்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்துள்ள நிறுவனப் பிரதிநிதிகள் குழு பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளது.

சந்திப்பில் வடமாகாணத்தில் எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம்? அதற்கான சாதகங்கள் மற்றும் பாதகங்கள் தொடர்பாகப் பிரதானமாக ஆராயப்பட்டுள்ளது.

ஆளுநரின் செயலாளர் வாகீசன் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்–

வடக்கின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு வி.ஜி.பி குழுமம் முன்வந்துள்ள நிலையில் அவர்களுக்குத் தேவையான வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் வடமாகண ஆளுநரும் ஆர்வமாக உள்ளார் எனத் தெரிவித்தார்.

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க .சச்சிதானந்தன் கருத்தை தெரிவிக்கையில் –

வி.ஜி.பி. குழுமமானது இந்தியாவில் பிரபலமான சுற்றுலாத்துறை நிறுவனமாகக் கருதப்படுகின்ற நிலையில் அதனை நாம் சரிவர பயன்படுத்தி வடக்கு சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் முன்னின்று செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.வாகீசன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோரும், இந்திய தரப்பில் வி.ஜி.பி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோம் தலைமையில் நீதியரசர் டி.என் வள்ளிநாயகம், பேராசிரியர் உலகநாயகி பழனி, பேராசிரியர் திலகவதி, பேராசிரியர் புவனேஸ்வரி, வழக்கறிஞர் அப்துல் கனி, திருமதி கலைவாணி, திருமதி சரண்யா, திரு பீட்டர், முனைவர் பட்ட ஆய்வாளர் நாகப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பெருந் தொகை கசிப்பு கல்குடாவில் சிக்கியது!



கல்குடா பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரி கே.வினோத் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகளான எம்.எல்.எம்.முஹைதீன், பண்டார, நோரஜன், பெண் பொலிஸ் அதிகாரி தில்ருக்ஸி அடங்களான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் போது 47 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு, 101,400 மில்லி லீற்றர் கோடா, வடி சாராயம் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் உட்பட ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் நடத்திய ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது சந்திவெளி, பேத்தாளை, வாழைச்சேனை, கல்குடா, கண்ணகிபுரம், கும்புறுமூலை போன்ற பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்கு தயாராக இருந்த நிலையிலயே இவை கைப்பற்றப்பட்டன என கல்குடா பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரி கே.வினோத் தெரிவித்தார்.

## சேபால் அமரசிங்கவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்!



ஸ்ரீதலதா மாளிகை தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த சேபால் அமரசிங்க விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவரை பெப்ரவரி 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

## நாடாளுமன்றை படமெடுத்த யாழ்ப்பாணத்தவர் கைது!

கொழும்பு, பெப். 01

நாடாளுமன்ற உயர் பாதுகாப்பு வலயத்தை காணொளி எடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரை நாடாளுமன்ற பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். பின்னர், சந்தேகநபர்கள் இருவரும் தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி மாலை, நாடாளுமன்ற மைதானத்தில் உள்ள ரணவிருநினைவுத்தூபிக்கு அருகில் உள்ள அதியுயர் பாதுகாப்புப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த சந்தேகநபர்கள் நாடாளுமன்றத்தை வீடியோ பதிவு செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22 மற்றும் 31 வயதுடைய யாழ்ப்பாணம் மற்றும் குருந்துவத்தையைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் கடந்த திங்கட்கிழமை கடுவெல நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பெப்ரவரி 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நல்ல மாற்றம்

மாகாண சபை முறையை எதிர்க்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார் ஜனதா விமுக்திப் பெரமுன (ஜேவிபி) தலைவர் அனுரகுமார திஸநாயக்க. கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழியாக மாகாண சபைகளைப் பார்ப்பதாகவும் அந்த நேர்காணலில் அவரது கருத்துக்கள் அமைந்திருந்தன.

ஒரு காலத்தில் மாகாண சபை முறையைக் கடுமையாக எதிர்த்தது அவரது கட்சி. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்ததை பிரிக்கக் கோரும் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததும் அவரது கட்சிதான். அந்த வழக்கின் மூலம்தான் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாகத் துண்டாடப்பட்டன. இதனால் அவரது கட்சியின் மீது தமிழ் மக்களுக்கு மன்னிக்க முடியாத கோபம் இருந்து வருகின்றது.

ஜேவிபி அந்த நிலைப்பாட்டை எடுத்தபோது விமல் வீரவன்ஸ போன்ற கடும்போக்குவாதிகள் அதன் அங்கமாக இருந்தார்கள். அவர்களின் தவறான வழிநடத்தலின் அடிப்படையிலும்தான் கட்சி அத்தகைய தீர்மானங்களை எடுத்ததாக பின்னால் வந்த ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கூறியிருக்கிறார்கள். அதிலிருந்து கட்சியின் கருத்துக்கள் மாற்றமடைந்துள்ளன என்றும் அவர்கள் பல சமயங்களில் கோடிட்டுக்காட்டியிருக்கிறார்கள்.

இப்போது கட்சியின் தலைவரிடமிருந்தே பகிரங்கமாக அந்தக் கருத்து வெளிப்பட்டிருப்பது கட்சின் கொள்கை மாற்றத்தைக் குறிக்கிறது. அது மகிழ்ச்சியளிக்கின்ற நல்லதொரு மாற்றம்.

ஆனால், இன்னொன்றையும்கூட ஜேவிபி நன்கு புரிந்தகொள்ளவேண்டும். மாகாண சபைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அல்ல. தமிழ் மக்கள் அதனை ஒருபோதும் தீர்வாக ஏற்றுக்கொண்டதுமில்லை. அரசில் தீர்வை நோக்கிய பயணத்தில் நிர்ப்பந்தத்திற்காகவேனும் இலங்கை அரசு அடியெடுத்து வைத்ததற்கான ஒரு அறிகுறி மட்டுமே மாகாண சபைகள். தமிழ் மக்களுக்கான தீர்வுக்கு இன்னும் நிறையத் தூரம் போகவேண்டியுள்ளது.

அதற்கான முயற்சிகளில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை இனவாதமாக முத்திரை குத்தும் போக்கு தென்னிலங்கை அரசியலில் ஊறிப்போய்க் கிடக்கிறது. ஜேவிபியும்கூட பல சமயங்களில் அதையொட்டிய கருத்தோட்டங்களுடன் இயைந்தே போயிருக்கிறது என்பது வரலாறு. கட்சி அந்தக் கண்ணோட்டத்தையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டும்.

தமிழர்களின் அரசியல் விடுதலைப் பயணத்தில் கடந்த காலங்களைப் போன்று ஜேவிபி எதிர்நிலை எடுக்காதிருப்பதைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆதரவோடு இருக்கவேண்டும் என்பது அவர்களின் விருப்பு.

அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பது தமிழர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அது முடியாது என்கிற நிலை ஏற்பட்டபோதுதான் அவர்கள் ஆயுதங்களின் மீது நம்பிக்கை வைத்தார்கள். ஆயுதங்களின் பாதை தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் தமிழர்கள் தமது அரசியல் கோரிக்கையை இலக்கை கைவிடவில்லை. இந்தப் புள்ளியில் தமிழர்களும் ஜேவிபியும் ஒன்றிணைகிறார்கள். இரு தரப்பினருமே ஆயுதப் போராட்டத்தோல்விக்குப்பின்னரும்தமது இலக்குகளில் இருந்து விலகிவிடவில்லை. எனவே இரு தரப்புகளும் புரிந்துணர்வோடு முன்னகர்வது காலத் தேவை. அது வெறும் தேர்தல் அரசியல் நகர்வுகளாக அல்லாமல், புரிந்துணர்வுமிக்க கலந்துரையாடல்கள் வழியான இணக்கமாக இருக்கவேண்டும்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்குக!

## சட்டமா அதிபரை வலியுறுத்தும் எதிர்க்கட்சி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தகவல்களை அறிந்திருந்தும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு எதிராக விரைவில் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக காவிந்த ஜயவர்தன, ஹெக்டர் அப்புஹாமி மற்றும் சட்டத்தரணிகள் இந்த கோரிக்கையை சட்டமா அதிபரிடம் முன்வைத்தனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தகவல்களை அறிந்திருந்தும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதவர்களுக்கு எதிராக விரைவில் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நாடாளுமன்ற உறுப்புரிமையும் இல்லாமலாக வேண்டும். அவரை 10 கோடி ரூபா நஷ்ட ஈடு செலுத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதே போன்று நிலாந்த ஜயவர்தனவும் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எவருக்கும் குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டுள்ள எந்தவொரு கட்சியுடனும் தாம் கூட்டணியமைக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் ஏன் அரசாங்கமும், பொலிஸாரும் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர்? தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றை மறைப்பதும் குற்றமாகும். – என்றார்.

# சீனா நிதியியல் உத்தரவாதம் தொடர்பான கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானவையே!

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க காட்டம்

கொழும்பு, பெப். 01

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சீனாவின் நிதியியல் உத்தரவாதம் தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானவை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கைக்கு அவசியமான நிதியியல் உத்தரவாதத்தை இந்தியா மாத்திரமே எழுத்துமூலம் வழங்கியிருப்பதுடன் பாரிஸ் கிளப்பில் அங்கம்வகிக்கும் நாடுகளும் தமது நிதியியல் உத்தரவாதத்தை வாய்மொழி மூலம் வழங்கியுள்ளன. அதே வேளை சீனாவும் வெகுவிரைவில் இந்த உத்தரவாதத்தை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடனை மீளச்செலுத்துவதற்கான கால அவகாசத்தை வழங்கல், கடன் நிறுத்தம், மீள் நிதியுதவி என்பன தொடர்பாகக் கடன் வழங்குநர்கள் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

சீனா உத்தரவாதம் வழங்குவதற்கு முன்னர் அது தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதென்பது சிறுபிள்ளைத்தனமான செயலாகும்.

நாம் அனைத்துக் கடன்வழங்குநர்களிடமும் வெளிப்படைத்தன்மையுடனும் பக்கச்சார்பின்றியும் நடந்துகொள்வோம் என்று ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



நாம் இந்தியாவிடமிருந்து நிதியியல் உத்தரவாதத்தைப் பெற்றிருப்பதுடன், வெகுவிரைவில் பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகளும் எமக்கு அவசியமான உத்தரவாதத்தை வழங்குமென எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று சீனாவிடம் பகுதியளவிலான உத்தரவாதம் பெறப்பட்டிருக்கின்றது. அது சர்வதேச நாணய நிதியத்தின் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டதா? இல்லையா? என்பதை சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு செய்யும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் உயர்வான வரி அறவீடு, உயர் பணவீக்கம், குறைந்த வருமானம், அதிக வட்டிவீதம் மற்றும் தொழில் இழப்பு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், நாடு மீண்டும் மீட்சியடைவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் பேருந்து மீது இரவு நேரத்தில் கல் வீச்சு

தென்மராட்சி, பெப். 01

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடிப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு தனியார் பேருந்து ஒன்றின் மீது கல் வீசப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்து மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக நடத்துகின்றனர். எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/பெயர்மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் இலங்கைப் பிரஷ்ஜயாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல் கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் எட்டு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 11 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதினோராயிரத்து அறுநூறு பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற் திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல்இ ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்;மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்பு நிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தஷ்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத் திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

**விண்ணப்பங்கள் / பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.**

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.

2. விண்ணப்பதாரி / பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.

3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.

4. பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.

5. விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள், பெயர் மொழிவுகள் **'பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்'** என முகவரியிட்டு மூடிய கடித உறையில் **01.03.2023** அன்று பி.ப **3.00** மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'துணைவேந்தர் பதவி'** எனக் குறித்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் / பெயர்மொழிவுகளுக்கான முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எண் 02/2020 சுற்றறிக்கையில் எடுத்துக்கூறப்பட்ட கட்டமைப்பு அம்சங்களுக்கேற்ப நடாத்தப்பெறும். இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட இம்மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்திற்கு வேட்பாளர் அழைக்கப்படுவார். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் **https://www.ugc.ac.lk/en/policy/commission-circulars/176-circulars-published-in-2020-012020-and-above/2198-commission-circular-no-022020-appoinment-to-the-post-of-vice-chancellor.html** இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தவிர்க்கமுடியாத சூழ்நிலையொன்றில் வேட்பாளர் ஒருவர் மதிப்பீட்டுக் குழுவின் முன் சமுகமளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொளி மாநாடு **(video conference)** ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக பேரவையின் விசேட கூட்டமொன்று, மூன்று பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விதந்துரைப்பதற்காக, மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத் திகதியன்றே கூட்டப்படும்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு நிரைப்படுத்தி சுருக்கிய பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அப்பேரவைக் கூட்டத்திற்கு ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு அழைக்கப்படுவர். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போதோ மதிப்பீட்டின் போதோ பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். தவிர்க்கமுடியாத சூழ்நிலையொன்றில் வேட்பாளர் ஒருவர் பேரவையின் விசேட கூட்டத்தின் முன் சமுகம் அளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொளி மாநாடு **(video conference)** ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2020 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**
**27.01.2023**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## றோவின் பங்களிப்பு



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 254

ஆஷா மௌலானாவின் சாட்சிய குறிப்புகளைத் தொடர்ந்தும் நோக்குவோம்.

சமீப காலங்களில் முள்ளிவாய்க்கால் போரின் போது இந்தியப் படைகளின் உளவுப் பிரிவான 'றோ'அந்தப் பகுதிகளில்ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு உதவியதாக இயங்கியதாகவும், அவற்றின் தடயங்களை மறைக்க இயங்கியவர்களில் சுந்தரி என்பவரின் பெயரும், அவர் தமிழ்நாட்ட அவர் எனவும் இந்திய தரப்புகளிடமிருந்து தகவல்கள் வெளியாகின.

இந்திய உளவுப்படை றோவினது இரகசிய செயற்பாடுகள் பற்றி ஜாத்தீஷ் ஜாதவ் (Yatish Yadav) சமீபத்தில் வெளியிட்ட நூலிலும் இவை பற்றிய குறிப்புகளும் உண்டு.

ஆஸாத் மௌலானா தனது சாட்சியங்களில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:–

"2008இல் பிள்ளையான் முதலமைச்சரான பின்னர்ஓகஸ்ட் மாதம்



அளவில் பஸில் ராஜபக்ஷ ஒரு சந்திப்புக்காக அழைத்திருந்தார். அங்கு நானும் பிள்ளையானும் அவரது அலுவலகம் சென்றபோது அங்கு ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். பஸில் ராஜபக்ஷ அவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரது பெயர் திருமதி பிரபா மூர்த்தி. அவருடன் தொடர்புகளை பேணும்படி அவரது தொலைபேசி இலக்கத்தையும் தந்தார். நமது தொலைபேசி இலக்கத்தையும் அவரிடம் கொடுத்தோம். அவர் இந்திய றோவினால் நியமிக்கப்பட்டவர். 'அரியோம் நம' என்றே இந்திய உளவுப் படை இலங்கை உள்நாட்டு யுத்தத்தைத் தயாரித்து, தொடர்ந்து 2009 முள்ளிவாய்க்கால் வரை வழி நடத்திக் கொண்டு வந்தது. வடக்குப் புலிகளில் இருந்து கிழக்குப் புலிகளை பிரித்ததில் பெரும் பங்கு இந்தியா உளவுப் படையான றோவையே சாரும்"

இந்தச் சந்திப்பின் பின் றோவோடு அவர்களது தொடர்புகள் அதிகரித்தன. ரகு என்ற அங்கத்தினர் அவற்றைக் கவனிக்க நியமிக்கப்பட்டு, அவர் மலேசியாவில் உள்ள றோவின் அதிகாரி ஒருவரைச் சந்தித்து வந்தார். பின் ரகு 14 நவம்பர் 2008 இனம் தெரியாதவர்களால் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட, அதனை ஸ்ரீலங்கா இராணுவப் பகுதியே செய்திருக்கும் என பிள்ளையான் தெரிந்திருந்தாலும் அவர்களது உறவை முறியடிக்க முடியவில்லை. ஆயினும் தொடர்ந்தும் றோவினது தொடர்புகள் வைத்துக் கொள்ளப்பட்டு, அதற்கான பண உதவிகளும் அவர்களுக்கு செய்யப்பட்டன. பிள்ளை



கர்தினால் மல்கம் ரஞ்சித்

யானிடமிருந்து றோ எதிர்பார்த்த உதவிகள், கிழக்கு கரையோரங்களில் சீனாவும் பாகிஸ்தானும் செல்வாக்கு பெறாமல் பார்த்துக் கொள்வதுதான்.

மேற்கொண்ட சாட்சியங்களில் அவர்கள் நான்கு தடவைகளுக்கு மேல் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டதும் இந்தியாவின் றோவின் ஏற்பாடுகளில் நிர்வாக பயிற்சி பட்டறைகளுக்கு சென்று வந்தவை பற்றியும் தெரிவிக்கப்படுகிறது. கொலைகளிலேயோ, வன்முறைகளிலோ பாவிக்கப்பட்டவர்கள் ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்திய பாஸ்போர்ட், விசா, மற்றைய ஆவணங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு அகதிகளாக இருப்பதற்கு உதவிகள் தந்து, அனேகர் ஸ்ரீலங்காவின் தூதரகங்களினால் பராமரிக்கப்படுவதும், விடுதலைப் புலிகள் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களின் பிரச்சாரங்களுக்கும் குந்தகம் விளைவிக்க இவர்கள் பாவிக்கப்படுவதும் விவரிக்கப்படுகிறது.

தமிழ்மக்கள்விடுதலைப்புலிகளின் ஐரோப்பிய தளம் பரிஸிலிருந்து இயங்குகிறது. அது ஞானம் என்பவரின் கட்டுப்பாட்டில் ஸ்ரீலங்கா தூதரகத்தின் பண உதவிகளில் நடத்தப்படுகிறது.

இவை எல்லாமே தமிழரது உரிமைப் போராட்டங்களை நசுக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புகள். ஆயினும் வெளிநாடுகளில் வசிக்கும் அவர்களது போராளிகள், அங்கத்தினர்கள் அவற்றுக்காகவே பாவிக்கப்படுகிறார்கள்.

ஆஸாத் மௌலானாவுக்கு கஷ்டங்கள், நெருக்குவாரங்கள் இராணுவப் புலனாய்வு துறை இயக்குனரும் அவர்களது தொடர்பாளருமான சுரேஷ் சாலேயிடமிருந்து வந்தது. சுரேஷ் சாலேயுடன் ஆஸாத் மௌலானாவும் பிள்ளையானாலும் 2007 இல் இருந்தேநெருக்கமாகபழகிஉள்ளனர். சுரேஷ் சாலேக்கு சந்தேகங்கள் எழுந்தது, சஹ்ரானுடனான அவரது சந்திப்புகளை கத்தோலிக்க பேராயர் மல்கம் ரஞ்சித்தும் ஆயர் சிறில் காமினியும் இவை கோட்டாபயவை பதவிக்கு கொண்டு வருவதற்காக செய்யப்பட்டவை என ஊடகங்களுக்கு தரப்பட்ட செவ்விகளால்தான்.



அந்தச் சந்திப்பை அறிந்தவர்கள் ஆஸாத் மௌலானாவும் பிள்ளையானாலும் என்பதால், சுரேஷ் சாலே வலியவரில் விளக்கங்கள் தொடங்கினார் எனவும், சுரேஷ் சாலே அப்படி நினைப்பதாக பிள்ளையான் அவருக்கு சொல்லியபடியாலும், பிள்ளையான் இனி தனக்குச் சார்பாக உதவிகள் தராமல் இராணுவத்துடன் இருப்பார் எனத் எண்ணியதால் ஒழுங்குகள் செய்து வெளியேறியதாக கூறுகிறார் ஆஸாத் மௌலானா.

### ஆஸாத் மௌலானாவின் பட்டறிவு

ஆஸாத் மௌலானா. இப்பொழுது தனது பட்டறிவில் ஸ்ரீலங்காவின் அரசியல் கொள்கைகள் தற்சமயங்களில் (மஹிந்த விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை தொடங்கிய நாள்கள் தொட்டு) இராணுவப் புலனாய்வு கட்டமைப்புகளால்தான் தீர்மானிக்கப்படுகின்றன என்கிறார்.

அதன் யதார்த்தம்தானோ என்னவோ, ரணில் பலவற்றைப் பாதுகாப்புத் துறையுடன் கலந்தாலோசித்துத் தான் பதில் தர முடியும் என்கிறார்.

பேரினவாதி சரத் வீரசேகர தனது இராணுவப் பின்னணியில் பலாலியைச்சுற்றி உள்ள காணிகள் பொதுமக்களுக்கு விடுவிக்க முன் இராணுவத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்கிறார்.

தமிழ் மக்கள் ஒன்றை நினைவில்



ஆயர் சிறில் காமினி

கொள்ள வேண்டும்.

ஆஸாத் மௌலானா தந்த சாட்சியம், கருணா, பிள்ளையான் போன்றோர்கள், அவர்களது ஒற்றுமையீனங்களினாலும் சந்தேகங்களினாலும் எப்படி தமிழ் மக்களது உரிமை கோரிக்கைகளுக்கு எதிராக, விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற கோத்தில் பாவிக்கப்பட்டார்கள் என்ற சாட்சியம் மட்டுமல்ல, இதைப் போல விடுதலைப் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. எனப் பல விடுதலைக் குழுக்கள் கொடுத்த சாட்சியங்களும் எப்படி ஒரு குழுவினரின் மனித உரிமைகளை மற்றவர்கள் மீறினார்கள், சட்டவிரோத கொலைகள், வன்முறைகள் செய்தார்கள் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கட்டமைப்புகளுக்கு முன் உண்டு.

மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகளிலும் போது இவை கூட பெருமளவில் பரிசீலிக்கப்படும். விடுதலைக்கு என்று புறப்பட்ட தமிழ் மக்களது இளைஞர்களையும், தமிழ் மக்களினது அவலத்தையும், கையேந்தி நிற்கின்ற நிலையையும் பார்த்தால், 'நீதிக்கு தலைவணங்கு' என்னும் திரைப்படத்தில் கே.ஜே.ஜேசுதாஸ் பாடிய 'இந்தப் பச்சைக்கிளிக்கொரு....' என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வந்தன.

எந்தக் குழந்தையும்
நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே

பின் நல்லவராவதும்
தீயவராவதும்
அன்னை வளர்ப்பதிலே

தூக்க மருந்தினை
போன்றவை பெற்றவர்
போற்றும் புகழுரைகள்

நோய் தீர்க்கும்
மருந்தினைப் போன்றவை
கற்றவர்
கூறும் அறிவுரைகள்

ஆறு கரை
அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம்

தினம் நல்ல நெறி
கண்டு பிள்ளை வளர்ந்திடில்
நாடும் நலம் பெறலாம்

பாதை தவறிய
கால்கள் விரும்பிய ஊர்
சென்று சேர்வதில்லை

நல்ல பண்பு தவறிய
பிள்ளையை பெற்றவர்
பேர் சொல்லி
வாழ்வதில்லை.

(வளரும்....)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## ஆணைக்குழு உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டமை குறித்த

# விசாரணைகளின் தாமதம் நம்பிக்கையை குலைக்கும்

தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வரும் சூழலில், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் தொடர்பான விசாரணைகளின் தாமதம் மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும்.

அத்தோடு இது புலனாய்வுப் பிரிவினரை பெரும்பான்மையாகக் கொண்ட பொலிஸாரின் பெருமையையும் கேள்விக்குள்ளாக்கும் என்று பவ்ரல் அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே பெப்ரல் அமைப்பு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளான தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கு விரைவில் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கு முதலில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் முதலாவதாக ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு 12 நாளகள் நிறைவடைந்துள்ள போதிலும், இதனுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

வெளிநாட்டிலுள்ள நபரொருவரே இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்பதும், அவருக்கு இலங்கையிலும் ஆதரவு வழங்கப்படுகின்றமையும் தெளிவாகத் தெரிகிறது.

சில ஆணையாளர்களது இல்லங்கள், வாகனங்கள் புகைப்படமெடுக்கப்பட்டு அவை வட்ஸ்அப் செயலியூடாக அவர்களுக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது பல சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்த தொலைபேசி அழைப்பிற்கு எவ்வாறு பணம் செலுத்தப்பட்டது என்பதை ஆராய்ந்தால் இந்த சம்பவம் தொடர்பான ஏதேனும் தகவல்கள் கிடைக்கக் கூடும்.

உங்களின் கீழ் இயங்கும் பொலிஸ் திணைக்களம் திறமையான குற்றப்புலனாய்வு பிரிவினைக் கொண்டது. அதி நவீன தொழிநுட்பம் பயன்படுத்தப்படும் இந்த யுகத்தில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதிக்கப்படுவதன் ஊடாக, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அது மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதோடு, அவர்களது செயற்பாடுகளையும் சுதந்திரமாக செய்வதற்கும் இடையூறாக அமையும்.

PAFFREL

தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வரும் சூழலில், இந்த விசாரணைகளின் தாமதம் மக்களின் நம்பிக்கையை குலைப்பதற்கு காரணமாக அமையும் என்பதுடன், புலனாய்வுப் பிரிவினரை பெரும்பான்மையாகக் கொண்ட பொலிஸாரின் பெருமையையும் கெடுக்கும்.

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய விசாரணைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## புதையல் தோண்டிய பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது

பூண்டுலோயா புசுல்பிட்டிய விஹாரைக்கு பின்னால் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பூண்டுலோயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பூண்டுலோயா புராதன புசுல்பிட்டிய விஹாரைக்குப் பின்புறம் உள்ள காணியின் குகைக்கு முன்னால் உள்ள காட்டுப் பகுதியில், புதையல் தோண்டும்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மல்தெனிய ஊராபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது!

ஜா–எல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் 2 கிலோ 245 கிராம் கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொனஹென பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக ஜா – எல, ஏக்கல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 2 கிலோ 245 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 27 வயதுடைய பிபில பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவார். சந்தேகநபர் வெலிசறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஜா–எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ராஜபக்ஷக்கள் சூறையாடியதை ஈடுகட்டவே சாதாரண மக்கள் மீதும் அரசால் வரி விதிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு





தற்போதைய அரசு சாதா ரண மக்கள் மீதும் வரிகளைச் சுமத்தி, ராஜபக்ஷக்கள் திரு டிய பணத்தை அறவிட்டுக் கொண்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் கட்சி அலுவல கத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டைக் கட்டியெழுப்ப புதிய இலக்கும், தொலைநோக்குப் பார்வையும் தேவைப்பட்டாலும் நடைபாதையில் வியாபாரம் செய்யும் வியாபாரி முதல் எல்லோர் மீதும் தற்போதைய அரசு வரிக்கு மேல் வரி விதிக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதாகவே இதற்கு அவர்கள் காரணம் கூறுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தைக் கையாள்வது என்பது சாதாரண மக்களுக்குக் குறைந்த அழுத்தத்தைக் கொடுப்பதானதாக இருந்தாலும், தற்போதைய அரசு சாதாரண மக்கள் மீதும் வரிகளைச் சுமத்தி, ராஜபக்சக்கள் திருடிய பணத்தை அறவிட்டுக்கொண்டிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தாலும் நாட்டு மக்கள் மீது எந்த அழுத்தமும் இல்லாத வகையில் சர்வதேச நாணய நிதியத்தை கையாளுமாறே 220 இலட்சம் மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

தற்போதைய ஜனாதிபதியும் ஏனையோரும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு நடனமாடிக்கொண்டிருகின்றனர்.

விவசாயிகள் உள்ளிட்ட சாதாரண மக்களின் துன்பங்களைப் புரிந்து கொள்ளும் பிரேமதாஸ சகாப்தத்தை உருவாக்குவோம் – என்றார்.

### மாகாண சபை .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கவில்லை. இடைவிலகல் மற்றும் தாமதப்படுத்தல் என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தந்திரமாகும்.

தீர்வு

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசமைப்பினால் மாத்திரம் தீர்வு காண முடியாது. அரசமைப்பில் மொழி உரிமையை உறுதிப்படுத்தி விட்டு நடைமுறையில் மொழி உரிமைகளுக்கு முரணாக செயற்படும்போது அரசமைப்பில் காப்பீடுகள் வழங்குவது கேள்விக்குள்ளாக்கப்படும்.

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது நாட்டில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது. அக்காலக்கட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தமிழ் தலைமைகளுக்கும் இடையில் பேச்சு நடந்து இணக்கமான சூழலில் மாகாண சபை முறைமை அறிமுகப் படுத்தப்படவில்லை. இந்தியாவின் தேவைக்காகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது.தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே மாகாண சபை முறைமை உள்ளது. ஆகவே மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை எதிர்க்கப் போவதில்லை – என்றார்.

### சுதந்திர தின ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக பணம் செலவழித்து இந்த நிகழ்வை நடத்துவதே இதற்குப் பிரதான காரணம் என்று சஜித் தரப்பும் அநுர தரப்பும் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவாரிக்கே வன்னியலதோவும் கோடரியுடன் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றார்.

### மைத்திரி கோரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்க சமூகத்திடமும், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ஒரு திட்டமிட்ட பயங்கரவாதத் தாக்குதல். மன்னிக்கவே முடியாத கொடூர தாக்குதல். எனவே, இந்தத் தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்திடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்புக் கோரியதை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக் கொள்ளாது – என்றார்.

### வழக்கமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஓரிரு நாட்களில் அவர் வீடு திரும்புவார் – என்று சம்பந்தனின் குடும்பத்தினர் நேற்றிரவு 'காலைக் கதிர்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 17 செவ்வாய்க்கிழமை 31.01.2023 கதிர் 336

## வழக்கு ஒத்தி வைப்பு




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய பொங்கல் விழாவில் பங்கேற்கவந்தஜனா திபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மீதான வழக்கை

2

# இந்தியாவால் திணிக்கப்பட்ட 13 ஐ முழுமையாக அமுல்படுத்தாதீர்கள்



### ஜனாதிபதி, பிரதமர், எம்.பிக்களுக்கு பறந்தது பௌத்த தேரர்களின் கடிதம்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் எனக் கோரி எல்லே குணவன்ச தேரர் மற்றும் பெங்க முவே நாலக தேரர் ஆகியோர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும்அனைத்துநாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மன்னிப்பு கோரினார் மைத்திரி



இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க மக்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

2

## 2030 வரை ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பாராம் ரணில் விக்கிரமசிங்க

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, சிங்களத் தொலைக் காட்சி ஒன்றில் நேற்றிரவு ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று 2030

2



## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகின்றார் மைத்திரி!

### தன்னை எவரும் முடக்க முடியாது என்றும் சூளுரை

என்னை எவரும் முடக்க முடியாது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்வேட்பாளராக நான் போட்டியிடவுள்ளேன்.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியீட்டினேன். எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தலிலும் வெற்றிகிட்டும்என்றநம்பிக்கை இருப்பதால், அந்தத் தேர்தலில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவைப் பெறவுள்ளேன்.

எனக்கு எதிராக நடக்கும் சதிகளுக்கு அஞ்சப்போவதில்லை. நான் எதற்கும் பின்வாங்குபவன் அல்லன் - என்றார்.

2

## கோம்பையன்மணல் சுடலையில் புதிய மருத்துவக் கழிவு எரியூட்டி

### அமைப்பது குறித்து ஆராய்வு

யழ்ப்பாணம், ஜன.31

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கோம்பையன் மணல் சுடலையில் ஓர் மருத்துவ கழிவு எரியூட்டி அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இன்று மாநகர முதல்வரைச் சந்தித்த யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் இது குறித்து ஆராய்ந்தனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் ஏற்படும் மருத்துவக் கழிவுகளை முறையாக அகற்றி அதனை எரியூட்டுவதற்கான ஓரிடம் வேண்டும் என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அத்தகைய எரியூட்டியை கோம்பயன்மணல் மயானத்தில் அமைப்பதற்கான

8

## பயங்கரவாத வழக்கிலிருந்து வசந்த முதலிகே விடுதலை!

### ஏனைய வழக்குகளுக்காகத் தொடர்ந்து மறியலில்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை அந்த வழக்கிலிருந்து விடுவிப்பதாக கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்குக்காக வசந்த முதலிகே இன்று கொழும்பு பிரதம

2

## பல்கலை. மாணவர் போராட்டத்துக்கு ஜனநாயகக் கூட்டணி முழு ஆதரவு

(ந.குகதர்சன்)

இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகமாணவர்கள்ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துவரும் கரிநாள் போராட்டத்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முழு ஆதரவு வழங்கும் என்று புளொட் இயக்கத்தின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் சுதந்திரதினம் வருடாவருடம் அரசு கொண்டாடிக் கொண்டு வருகிறது.



ஆனால் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்து இன்று வரைக்கும் தமிழ மக்கள் அடக்கியொடுக்கப்பட்டு வருகிறார்கள்.

2

## பயங்கரவாத......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வசந்த முதலிகே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கில் இருந்து வசந்த முதலிகே விடுவிக்கப்பட்டாலும், இன்னும் சில வழக்குகளுக்காக அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## உயிர்த்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

15 வயதில் இருந்து பைபிள் வாசித்தவன்நான். எனதுஆட்சிகாலத்தில், வேறு நபர்கள் இழைத்த தவறால் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றது. அதற்காகப் பாதிக்கப்பட்ட மக்களிடமும், உயிரிழந்தவர்களின்உறவினர்களிடமும், கத்தோலிக்க மக்களிடமும் மன்னிப்புக் கோருகின்றேன்.

நான் தவறிழைக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பிலும் இது உறுதியானது. என்னால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்தான் தவறிழைத்தனர். அதற்கு நான் பொறுப்புக்கூறவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது – என்றார்.

## இந்தியாவால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளிட்ட சில அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படுமாயின் அது நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தம் இந்தியாவால் திணிக்கப்பட்டது என்றும், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மூலோபாயத் திட்டத்தின் ஒரு பகுதியாக அது இலங்கையின் நாடாளுமன்றத்தில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 13 ஆவது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பின்றி முழுமையாக அமுல்படுத்த வேண்டாம் எனவும், உள்நாட்டுவளங்கள்மற்றும்சொத்துக்கள் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதை உடனடியாகத் தடுக்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு மூலம் நாட்டுக்கு இழந்த செல்வம் மற்றும் வளங்களை மீட்டெடுக்க வேண்டும் எனவும் தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கு ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் அரச செலவீனங்களைக் குறைப்பது அவசியமானது என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஜனாதிபதி உட்பட அமைச்சரவையில் உள்ள எவரும் உள்ளூர் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதற்கான எந்தவொரு மூலோபாயத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வழக்கு ஒத்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெப்ரவரி 28ஆம் திகதி தவணையிட்டு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜனாதிபதியின் யாழ்ப்பாண பயணத்தின்போது போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட வேலன் சுவாமிகளின் வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இன்று விசாரணைக்கு வந்தது.

நீதிமன்ற அழைப்பாணைக்கமைய வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க செயலாளர் சி.ஜெனிற்றா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் ம.சோமபாலன் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

குறித்த இருவரும் தலா ஒரு லட்சம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் ஏ.ஆனந்தராஜா பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் அளிக்குமாறும் உத்தரவிட்டார். அத்தோடு வழக்கை பெப்ரவரி 28ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

இவர்கள் மீது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸார்மீதுதாக்குதல்மேற்கொண்டு காயங்களை ஏற்படுத்தியமை, சட்டவிரோத கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

வழக்கில் வேலன் சுவாமிகள் மற்றும் ஜெனிற்றா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.பி.தவராசாவும் ம.சோமபாலன் சார்பில் க.சுகாசும் ஆஜராகி வாதாடினர்.

மேலும் குறித்த வழக்கு தொடர்பாக ஆறு சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்ற அழைப்பாணை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2030 வரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை அவர் ஜனாதிபதியாக நீடிப்பார் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளர் என்றும் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி அல்லது கூட்டணி யில் போட்டியிடுவாரா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாலித ரங்கே பண்டார, ஜனாதிபதி தனது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடுவார் என்று குறிப்பிட்டார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு பதவி விலகிய கோட்டாபய ராஜபக்சவின் எஞ்சிய ஜனாதிபதிப் பதவிக் காலத்தை ரணில் விக்கிரமசிங்க தற்போது வகித்து வரும் நிலையிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்களுக்கு விளக்குவது முக்கியம்

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளின் ஆபத்தான மருத்துவக் கழிவுகளை எரியூட்டி அழிப்பதற்கான புதிய எரியூட்டி ஒன்றை கோம்பையன் மணல் மயானத்தில் அமைப்பது குறித்து யாழ்ப்பாணம் மாநகர சபையும் யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகளும் ஆராய்ந்துள்ளனர்.**

**ஆபத்தான மருத்துவக் கழிவுகளை முறையாக அகற்றவேண்டியதும் அதனால் மக்கள் பாதுப்புக்குள்ளாகாமல் பாதுகாக்க வேண்டியதும் மிக முக்கியமானவை.**

**கடந்த காலங்களைப்போன்றில்லாமல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையே கடந்த சில ஆண்டுகளில் பல மடங்கு பெருத்துவிட்டது. யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்லாது அனுராதபுரம், பொலன்னறுவை வரையான மக்களுக்கும் சேவையாற்றும் ஒரு மையமாக அது மாறி வருகின்றது.**

**அது தவிர சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடிய அனுமதியுடன் 17 தனியார் மருத்துவமனைகள் யாழ். குடாநாட்டில் இயங்கி வருகின்றன. இற்றுக்கு மேலாக அரசின் மாவட்ட, ஆதார வைத்தியசாலைகள் பலவும் இயங்குகின்றன.**

**இவை அனைத்திலிருந்தும் உருவாகும் ஆபத்தான மருத்துவக் கழிவுகள் முறையாக அகற்றப்படவேண்டியது அவசியம். அதற்கான உரிய பொறிமுறை ஏற்படுத்தப்படுவதும் அதற்கான திட்டமிடல் சரியாக அமைவதும்கூட அவசியம்.**

**தெல்லிப்பளை வைத்தியசாலையில் இதுபோன்ற ஒரு எரியூட்டி உண்டு. அது தவிர கடந்த காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலைக் கழிவுகளை எரியூட்டுவதற்கான ஒன்றுக்கு மேற்பட்ட எரியூட்டிகளும் உருவாக்கப்பட்டன. அவற்றைக் கடந்துதான் இப்போது புதிய எரியூட்டியை அமைப்பது குறித்து ஆராயப்படுகின்றது.**

**கோம்பையன் மணல் மயானத்தில் ஒரு எரியூட்டியை அமைக்க வேண்டிய தேவை என்ன? அங்கு எத்தகைய மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படும்? அதனால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் என்ன? அது அயலில் உள்ள மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்ன? கழிவுகளை எரிக்கும்போது ஏற்படும் புகை மற்றும் எரித்த பின்னர் எஞ்சும் சாம்பல் என்பனவும் குறைந்தளவு ஆபத்தை விளைவிக்கக்கூடியவை என்பதால் அவற்றின் முகாமைத்துவம் எப்படி இருக்கும்? எரியூட்டல் முகாமைத்துவத்தில் ஏற்படும் தவறுகளுக்குப் பொறுப்புக்கூறப் போகின்றவர்கள் யார்? தவறுகள் நிகழ்ந்தால் அதற்கான தண்டனைகள் என்ன? இழப்பீடுகள் என்ன? அவற்றை அடைவதற்கான வழிமுறைகள் என்ன? ஆகிய பல்வேறு விடயங்களும் இதில் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டியவையாக இருக்கின்றன.**

**தெல்லிப்பழை வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள எரியூட்டியின் புகைபோக்கி உயரம் மிக அபத்தான மருத்துவக் கழிவுகளை எரியூட்டப் போதுமானது இல்லை என்று கடந்த காலங்களில் சர்ச்சை எழுந்ததையும் அனுராதபுரம் போன்ற வெளியிடங்களில் இருந்தும்கூட இங்கு கழிவுகள் எரியூட்டப்படுவதற்காக அனுப்பப்பட்டதையும் யாழ்ப்பாண மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. எனவே புதிய எரியூட்டி தொடர்பாக முழுமையான விளக்கம் மக்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்களின் முழுமையான சம்மதம் பெறப்பட்ட பின்னரே இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவேண்டும்.**

# மணிவண்ணன் பொய் சொல்கிறார்

## யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட் இன்று தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதவி விலகிய முன்னாள் முதல்வர் மணிவண்ணன் பத்திரிகையாளர்களைக் கூட்டி பொய் சொல்கிறார் என்று தெரிவித்தார் தற்போதைய முதல்வர் இ.ஆனல்ட்.

மாநகர சபையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த ஆனல்ட் மேலும் தெரிவித்ததாவது:

மாநகர சபை அமர்வு நேற்றைய தினம் இடம்பெற்றபோது முன்னாள் முதல்வர் உட்பட பலர் அதில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் வரவேட்டில் கையெழுத்து வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதன் பின்னர் சபையில் நடந்தவைகள் என்றுகூறி பொய்கள் பலவற்றைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயன்றிருக்கிறார்கள்.

தாங்கள் கொண்டு வந்த செயல் திட்டங்களைத்தான் நாம் நடைமுறைப்படுத்துகின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கற்களில் பெயர் பதித்த திட்டங்கள் எல்லாமே எனது காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள்.

ஆரிய குளம் தவிர முன்னாள் முதல்வரால் புனரமைக்கப்பட்ட அனைத்துக் குள திட்டங்களும் நான் முதல்வராக இருக்கும்போதே வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் முன்மொழியப்பட்ட திட்டங்களாகும். நான் தொடக்கியவற்றை மணிவண்ணன் செயற்படுத்தினரே தவிர அவர் ஒன்றும் புதிதாகச் செய்யவில்லை - என்றார்.

மாநகர சபையின் சட்டவிரோத முதல்வரான ஆனல்ட் தனது பதவிக் காலத்தில் கொண்டு வந்த பல திட்டங்களை நிறுத்துகிறார் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த மணிவண்ணன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

டயலொக் நிறுவனத்துடன் யாழ். மாநகர சபை செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஆளுநரின் ஆய்வுக்கும் நடவடிக்கைக்குமாக அனுப்பிவைப்பது என்று சபை எடுத்த நடவடிக்கையால், யாழ். நகரக் குளத்தை 8 கோடி ரூபா செலவில் புனரமைக்கும் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்றார்.

இவற்றுடன் அண்மையில் கள்ளியங்காட்டு சந்தையில் எம்மால் திறக்கப்பட்ட கட்டத்தின் பெயர்க்கல்லை அகற்றவேண்டும் என்றும் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

நான் முதல்வராக இருந்த போது நாடு பொருளாதார நிலையிலே பாதிக்கப்பட்டிருந்தாலும் தனியார் நிறுவனங்களின் கால்களிலே விழுந்து இவ்வாறான பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தேன். ஆனால் ஆனல்ட் முன்னர் முதல்வராக இருந்த போது சட்டவிரோதமாகத் தனது புது வீட்டைக் கட்டினார். அதுதான் அவர் செய்த விடயம்.

அந்த 8 கோடி பெறுமதியான செயற்திட்டத்தை நிறுத்தியதைப் போல் நான் தனியார் நிறுவனங்களிடம் கெஞ்சி மன்றாடிப் பெற்ற நிதியின் மூலம் கட்டிய ஆரியகுளத்தையும் இடிக்கப் போகின்றாரோ தெரியாது என்று மணிவண்ணன் மேலும் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஆனல்ட் இன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்திருந்தார்.

2023ஆம் ஆண்டு பாதீடு தோற்கடிக்கப்பட்டதும் இரண்டாம் தடவை பாதீட்டினை சமர்ப்பிக்க வக்கில்லாத முன்னாள் முதல்வர் பத்திரிகையாளர்களை கூப்பிட்டு பொய் உரைக்கிறார் வெட்கம் இல்லையா? சட்டம் தெரிந்த சட்டத்தரணியான அவர் திருட்டுத்தனமாக நான் முதல்வராக வந்தேன் என்று தெரிவிக்கின்றமை ஒரு வியப்பான விடயம் என்று தெரிவித்தார் ஆனல்ட்.

# நற்பிட்டிமுனையில் இரண்டு கட்டங்களாக இலங்கை தமிழரசுக்கட்சி தேர்தல் பிரசாரம்



(பாறுக் ஷிஹான்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 2023ஆம்ஆண்டுக்கானஉள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டல் அரசியல் கருத்தரங்குகளை இரண்டு கட்டங்களாக நடத்தி வருகின்றது.

இதற்கமைய கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை வட்டார பகுதியில் கட்சி மற்றும் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அரசியல் கருத்தரங்குகளை நடத்தியதுடன் அதிகளவான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உட்பட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மக்களுக்கு தேர்தல் முறைமை தொடர்பாக தெளிவுபடுத்தினர்.



# மசூதி மீது வெடிகுண்டுத் தாக்குதல் பாகிஸ்தானில் 63 பேர் உயிரிழப்பு

## 150க்கும் மேற்பட்டோர் காயம்

பாகிஸ்தானின் பொவர் நகரில் உள்ள மசூதியில் தற்கொலைப் படை தீவிரவாதி நடத்திய குண்டுவெடிப்பு தாக்குதலில் 63 பேர் உயிரிழந்தனர். 150க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்கவா மாகாணத் தலைநகர் பொவரில் பாதுகாப்பு மிகுந்த பொலிஸ் லைன் பகுதி உள்ளது. இங்குள்ள மசூதியில் நேற்று மதியம் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில் மசூதி கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதனால், அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. காவல் துறையினரும், மீட்புப் படையினரும் விரைந்து வந்து, மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டன. குண்டுவெடிப்பில் காயம் அடைந்தவர்கள், இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

குண்டுவெடிப்பில் 63 பேர் உயிரிழந்தனர் கூறப்படுகிறது. 150க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றனர். பொவர் நகரின் லேடி ரீடிங் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 23 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் கூறினர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

# ஏவுகணைகளை வைத்து ரஷ்ய அதிபர் மிரட்டினார்

## பிரிட்டனின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் தாக்கு



பிரிட்டன் பிரதமர் பதவியிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் விலகிய போரிஸ் ஜான்சன் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஏவுகணைகளை வைத்துத் தன்னை மிரட்டினார் என்று தெரிவித்துள்ளார்.

லண்டன் பிபிசி நிறுவனத்திற்கு சமீபத்தில் ஒரு நேர்காணல் அளித்திருக்கிறார் ஜோன் சன். அதில் புடின் குறித்து அவர் கூறிய தகவல் சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பேட்டியில் போரிஸ் ஜான்சன் தெரிவித்ததாவது:

உக்ரைன் மீது படையெடுத்தால் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவின் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்கும், நேட்டோ படைகள் ரஷ்யாவின் எல்லைகளுக்குள் நுழைவதற்கும் வழிவகுக்கும் என்று 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமே புடினுக்கு நான் எச்சரிக்கை விடுத்தேன். மேலும் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையைத் தடுப்பதற்காக உக்ரைன் எதிர்காலத்தில் நேட்டோவில் சேராது என்றும் நான் புடினிடம் கூறினேன். ஆனால் ஒரு கட்டத்தில் புடின் என்னை மிரட்டத் தொடங்கினார்.

"போரிஸ் ஜான்சன், நான் உங்களைக் காயப்படுத்த விரும்பவில்லை, ஆனால், ஏவுகணை மூலம், அது சில நேரம் நிகழலாம்" என்றார். அதனைத் தொடர்ந்து பேச்சு தொனியிலிருந்து புடின் விலகியது அவரது பேச்சில் தெரிய வந்தது என்று தெரிவித்தார்

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முடிவெடுத்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடனும் உக்ரைன் நெருக்கம் காட்டியது. இந்த நடவடிக்கைகளால் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறி, உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது. தொடர்ந்து உக்ரைன்-ரஷ்யா போர் நடைபெற்று வருகிறது. போர் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.



# அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கி சூடு; 9 பேர் காயம்

அமெரிக்காவின் ஃப்ளோரிடா நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 10 பேர் காயமடைந்தனர். சம்பவம் ஃப்ளோரிடாவின் ப்ளம் நகரில் அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.40 மணிக்கு நடந்துள்ளது.

இதனை லேக்லேண்ட் காவல்துறை உறுதி செய்தது. பொலிஸ் விசாரணையின்படி சம்பவ இடத்தில் நின்றிருந்த ஒரு நீல நிற காரில் இருந்த 4 பேர் அதிலிருந்து இறங்கி துப்பாக்கிகளால் சுட்டனர் எனத் தெரிகிறது. அந்தக் காரின் 4 ஜன்னல்களும் ஒரே நேரத்தில் இறக்கிவிடப்பட்டு துப்பாக்கிச் சூடு ஒரே நேரத்தில் நடத்தப்பட்டுள்ளது.

ஆண்களைக் குறிவைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பின்னர் நிகழ்விடத்திலிருந்து அந்தக் கார் வேகமாகத் தப்பிச் சென்றுள்ளது. சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பயன்படுத்திய அந்தக் காரை தேடி வருவதாக லேக்லேண்ட் காவல்துறை தெரிவித்தது.

ஒரே மாதத்தில் 3 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்: கடந்த ஜன.21 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மான்டெரி பார்க் நகரில் துப்பாக்கிச் சூடு நடந்தது. ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் உள்ள இங்கு, ஆயிரக்கணக்கானோர் ஒன்றாகக்கூடி சீன புத்தாண்டை கொண்டாடிக் கொண்டிருந்தபோது இந்த துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஜனவரி 23ஆம் திகதி அமெரிக்காவில் வடக்கு கலிபோர்னியா, அயோவா, சான் பிரான்சிஸ்கோ உள்பட 3 இடங்களில் நடந்த வெவ்வேறு துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 2 மாணவகள் உள்பட 9 பேர் உயிரிழந்தனர். தற்போது ஃப்ளோரிடாவில் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இதில் 9 பேர் காயமடைந்துள்ளனர். 2023ஆம் வருடம் தொடங்கி ஒரே மாதத்தில் 3 பெரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன.

அமெரிக்காவில் கடந்த 2022ஆம் ஆண்டு மட்டும் 647 பெரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. துப்பாக்கி வன்முறை ஆவண காப்பக தகவலின்படி 2022இல் அமெரிக்கா முழுவதும் துப்பாக்கி சூட்டில் மட்டும் 44 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் தற்கொலையால் இறந்தவர்களாவர்.



# நைஜீரியாவில் விபத்துகளில் 20 பேர் உடல் நசுங்கிச் சாவு

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில், பேருந்து, பாரவூர்தி தொடர்புடைய இரு வேறு விபத்துகளில் 20 பேர் உயிரிழந்தனர். இது குறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது:

வாத்தக நகரான லாகோஸில் ட்ரக் மூலம் கொண்டு வரப்பட்ட மிகக் கனமான கன்டெய்னா, போக்குவரத்து நெரிசல் மிக்க பாலமொன்றில் அருகில் நின்று கொண்டிருந்த பேருந்து மீது விழுந்தது. இதில், அந்தப் பேருந்தில் இருந்த 10 பேரில் ஒரே ஒரு பெண் மட்டுமே உயிா தப்பினார். 2 சிறுவாகள் உள்ளிட்ட மற்ற 9 பயணிகளும் உடல் நசுங்கி உயிரிழந்தனா.

அந்த நகருக்கு அருகே, ஓடிக்போ கவுன்சில் பகுதியில் மற் றொரு பேருந்து மீது பாரவூர்தி மோதி ஏற்பட்ட விபத்தில் பேருந்து தீப்பிடித்து 11 போ உடல் கருகி உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் கூறினர்.

# கொழும்பு தலைநகர நகர அபிவிருத்தித் திட்டத்தின் எஞ்சிய வேலைகளை முடிக்க நடவடிக்கை எடுக்குக!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் பிரசன்ன பணிப்புரை



கொழும்பு தலைநகரின் நகர அபிவிருத்தித் திட்டத்தின் எஞ்சியுள்ள பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்தத் திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்காக இந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகை 45 கோடியே 70 லட்சம் ரூபாவாகும். இந்தத் திட்டத்தின் 99 வீத பணிகள் இதுவரை முடிவடைந்துள்ளன.

கொழும்பு தலைநகரின் நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 55 உப திட்டங்கள் உள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகரசபை என்பன இணைந்து இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன. கொழும்பு மாநகரசபை, ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை மற்றும் கொலன்னாவ மாநகர சபை ஆகியவை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் 3 நீரேற்று நிலையங்களின் பணிகள் நிறைவடைந் துள்ளன. அம்பத்தலே நீரேற்று நிலையம், புனித செபஸ்டியன் வடக்கு தெரகுலு நீரேற்று நிலையம் மற்றும் புனித செபஸ்டியன் தெற்கு நீரேற்று நிலையம் ஆகிய மூன்று நீரேற்று நிலையங்கள் ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் புதிய முத்துவெல்ல சுரங்கப் பாதை மற்றும் டொரிங்டன் சுரங்கப் பாதையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கால்வாய்களை மேம்படுத்துதல் மற்றும் கால்வாய் மாற்று திட்டங்கள் மற்றும் ஈரநில பூங்காக்கள் மற்றும் நேரியல் பூங்காக்கள் ஆகியவற்றின் மேம்பாடும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் கொலன்னாவ கால்வாய் திருப்பம், மடிவெல கிழக்குத் திருப்பம், பேரே லேக் லீனியர் பார்க் மற்றும் கோட்டே ரெம்பார்ட் பூங்கா ஆகியவை அடங்கும். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி உலக நகர தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கோட்டே ரெம்பாட் ஈரநில பூங்கா பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. அதற்காக செலவிடப்பட்ட தொகை சுமார் 40 கோடி ரூபா ஆகும்.

கொழும்பு மாநகர, நகர அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நோக்கம் கொழும்பு நீர் வழிநிலத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கைக் குறைப்பதாகும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பை உலகத் தரம் வாய்ந்த நகரமாக மாற்றுவது, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குவது, சுற்றுலாவை மேம்படுத்துவது மற்றும் உள்கட்டமைப்பை புனரமைப்பது மற்றும் பராமரிப்பது ஆகியவை மற்ற நோக்கங்களாகும். இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு, ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மற்றும் கொலன்னாவ மாநகர சபை ஆகியவற்றினது உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

# அம்பாறை தங்கவேலாயுதபுரத்தில் பீட்ரூட் அமோக விளைச்சல்

## முருங்கை செய்கை ஆரம்பம்





(வி.ரி. சகாதேவராஜா)

பொதுவாக மலையகத்தில் உற்பத்தியாகும் பீட்ரூட் இம்முறை அம்பாறை மாவட்ட தங்கவேலாயுதபுரத்தில் செய்கைபண்ணப்பட்டது. அதில் அமோக விளைச்சல் கிடைக்கப்பெற்றிருக்கின்றது .

இதனை திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் குழுவினர் அங்குசென்று பார்வையிட்டார்கள். இதேவேளை அங்கு முருங்கை மரச் செய்கையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் முருங்கை, சோளம், உளுந்து செய்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அத்தோடு முதன்முறையாக தங்கவேலாயுதபுரத்தில் பீற்றூட் செய்யப்பட்டு சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக கல்முனை சுகாதார பிராந்திய பணிமனையின் கீழ்

உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தில் முருங்கை செய்கை தங்கவேலாயுதபுரத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனை திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் உள்ளிட்ட குழுவினர் முருங்கை மரக்கன்றை நட்டு செய்கையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் மூலம் அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து வரும் இரும்பு சத்துக்குறைபாடு மற்றும் இரத்த சோகை நோய்களை கட்டுப்படுத்துவதற்காக இது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# அரச கரும மொழிப் பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் செயலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழிப் பாட நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு காஞ்சிரங்குடா- கால்நடை வளர்ப்பு பண்ணையாளர் பயிற்சி நிலைய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் அ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பின் கீழ் விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் க.சந்திரசேகரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. மோகனராஜா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கே. விநாயகமூர்த்தி மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வளவாளரான எ.எம்.எம். முஜீப் விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் பாட நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் தாம் பெற்றுக்கொண்ட மொழித்தேர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# ஆசிரிய ஆலோசகர் நியமனம் மட்டக்களப்பில் வழங்கல்!



(கொக்கட்டிச்சோலை நிருபர்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர்களாகக் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு நேற்று (திங்கட்கிழமை) மாகாணக்கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் முறையான ஆசிரியர் ஆலோசகர் நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில், கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் த.அனந்தரூபன், மட்டக்களப்பு மேற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான செ.மகேந்திரகுமார், த.யசோதரன், சஜீவன், ந.குகதாசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, 19 பேருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஆசிரிய ஆலோசகர் சேவை நிறுவப்பட்ட பின்னர் முறையான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த சேவையில் தரம் 1, 2 ஆகிய தரங்களுக்கே இந்த ஆசிரியர் ஆலோசகர்கள் உள்வாங்கப்பட்டு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு ஆனால் 13 குறித்து குழப்பம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு இது

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள்சக்தி அதிகாரபகிர்விற்கு ஆதரவை வெளிப்படுத்தினாலும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாக எவ்வித நிலைப்பாட்டையும் இதுவரை எடுக்கவில்லை.

இனப்பிரச்சினை தொடர்பான சமீபத்தில் இடம்பெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தை நிராகரித்த ஐக்கிய மக்கள் சக்தி, அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசாங்கத்தின் முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற பெரும்பான்மையை வைத்து ஜனாதிபதியை தன் பக்கம் வைத்திருக்கும் அரசாங்கம் தனது முன்மொழிவுகளை வெளியிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இருப்பினும் தமது ஆட்சியில் அதிகாரப் பகிர்வு எந்த வடிவத்தில் இருக்கும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரே அறிவிப்போம் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் மாகாணங்களுக்கு சுயாட்சியை வழங்குவதை இலக்காகக் கொண்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த விரும்புவதாக



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



## சுதந்திரதினத்தை முன்னிட்டு கல்முனையில் சிரமதான பணி!

(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனைக்குடி – 01 பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகள், பொதுமக்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை கல்முனை கடற்கரைப் பற்றி வளாகத்தில் சிரமதானத்தை முன்னெடுத்தனர்.

கல்முனைக்குடி-01 அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.றினோஸா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ராசமலர், கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.எல்.எம்.தௌபீக் ஆகியோரின் வழி நடத்தலில் இந்தச் சிரமதானம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இங்கு மிக ஆர்வத்துடன் மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

## அரச நிறுவனங்களின் ஊழியர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது

அரச நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்களில் அனைத்து அரச நிறுவனங்களிலும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக பொருளாதாரம் இந்த ஆண்டு வீழ்ச்சி!

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இந்த ஆண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2.9 விகிதம் ஆகக் குறைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலக பொருளாதார பகுப்பாய்வு தரவுகளின்படி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு உலகப்பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தாலும், அடுத்த ஆண்டு அது 3.1 வீதம் ஆக உயரும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

## மன்னாரில் சிறுகடற்றொழில் இராணுவத்தினரால் நிறுத்தம்

### சாள்ஸ் நிர்மலநாதனின் தலையிட்டால் மீண்டும் அனுமதி!



மன்னார்– யாழ் பிரதான வீதி, தள்ளாடி 14 கண் பாலத்தடியில் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலங்களாக சிறு கடல் தொழில் செய்யும் மீனவர்களை இராணுவம் அந்தப் பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்காததன் காரணமாக அந்தப் பகுதி மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதனின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி பகுதிக்கு திங்கட்கிழமை மாலை நேரடியாக சென்று மீனவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் வன்னி இராணுவ தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சனை தொடர்பாகத் தெரியப்படுத்தினார்.

உடனடியாக தள்ளாடி இராணுவ பொறுப்பு அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகைதந்து நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு அமைவாக அந்த மீனவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் சிறு கடல் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பாலத்தடியில் நாக தாழ்வு, பெரிய நாவற்குளம், மாந்தை மற்றும் திருக்கேதீஸ்வரம் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு சிறு கடற்றொழில் செய்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

## ஜனவரியில் அரச வருமானம் ரூ. 158 பில்; செலவு ரு 367 பில்.

### அமைச்சர் பந்துல

ஜனவரி மாதத்தில் 158.7 பில்லியன் ரூபாக்களையே அரசாங்கம் வரிகளாக பெற்றுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகள் உட்பட அரச செலவீனம் 367.8 பில்லியன்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். குறித்த செலவீனம் ஜனவரி 27 ஆம் திகதி வரை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## பெரும்பாலான தேர்தல் விதிமீறல்களுக்கு பின்னால் இருப்பது ஆளும் கட்சிதான்

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் காலத்தில் இதுவரை பதிவாகியுள்ள தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகளில் பெரும்பான்மையானவை ஆளும் கட்சியை சேர்ந்தவை என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரக் காலத்தில், குறிப்பாக ஆளும் கட்சியியான பொதுஜன பெரமுனவால் அரச சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 15 வழக்குகளை தமது அமைப்பு பதிவு செய்துள்ளதாகவும் அவற்றில் பெரும்பாலானவை பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பானவை என பெப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

# ஜெகோவிச் மீண்டும் முதலிடத்தில்

ஆஸ்திரேலிய ஓபனில் சாம்பியன் டென்னிஸ் தொடரில் பட்டம் வென்ற நோவாக் ஜெகோவிச் சர்வதேச டென்னிஸ் தரவரிசை பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடித்தார்.

35 வயதான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் நேற்று முன்தினம் நிறைவடைந்த ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட் ஸ்லாம் தொடரில் அவர், கைப்பற்றிய 22ஆவது பட்டமாக இது அமைந்தது.

இதன் மூலம் 7,070 புள்ளிகளுடன் சர்வதேச டென்னிஸ் தரவரிசை பட்டியலில் ஜோகோவிச் 4 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்தார்.


முதலிடம் வகித்து வந்த ஸ்பெயினின் கார்லோஸ்அல்கராஸ்காயம்காரணமாகஆஸ்திரேலிய ஓபனில் கலந்து கொள்ளாததால் தரவரிசை பட்டியலில் 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். ஜெகோவிச்சிடம் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த கிரீஸ் வீரர் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் ஓர் இடம் முன்னேறி 6,195 புள்ளிளுடன் 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

நோர்வேவீரர்காஸ்பர்ரூட்4ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். ஆஸ்திரேலிய ஓபன் கால் இறுதி சுற்றில் ஜெகோவிச்சிடம் தோல்வி அடைந்த ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லெவ் ஓர் இடம் முன்னேறி 5ஆவது இடத்தை அடைந்தார். 2ஆவது சுற்றுடன் வெளியேறிய ஸ்பெயினின் ரபேல் நடால் 4 இடங்கள் பின்தங்கி 6ஆவது இடத்தில் உள்ளார்.

கனடாவின் பெலிக்ஸ் ஆகர்-அலியாசிம், அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸ், டென்மார்க்கின் ஹோல்கர் ரூன், போலந்தின் ஹூபர்ட் ஹர்காக்ஸ் ஆகியோர் முறையே 7 முதல் 10ஆவது இடங்களில் உள்ளனர்.

மகளிருக்கான டென்னிஸ் தரவரிசை பட்டியலில் ஆஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்ற பெல்லாரசின் சபலெங்கா 6,100 புள்ளிளுடன் 3 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். போலந்தின் இகாஸ்வியாடெக் 10,485 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். துனிசியாவின் ஜபூர் ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா 4ஆவது இடத்துக்கும், பிரான்ஸின் கரோலின் கார்சியா 5ஆவது இடத்துக்கும் தள்ளப்பட்டனர். ஆஸ்ரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த கஜகஸ்தானின் எலெனா ரைபகினா 15 இடங்கள் முன்னேறி 10ஆவது இடத்தை அடைந்துள்ளார்.





# கிரிக்கெட்டிலிருந்து முரளி விஜய் ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரராக இருந்தவரான தமிழ்நாட்டைச் சேர்ந்த முரளி விஜய், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

வலது கை துடுப்பாட்டக்காரரான முரளி விஜய், இந்திய அணிக்காக 61 டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, 17 ஒருநாள் கிரிக்கெட் போட்டி, ஒன்பது ரி 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். கடைசியாகஅவர், கடந்த 2018பெர்த் நகரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பங்கேற்றிருந்தார்.

2008, -09ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முரளி விஜய் அறிமுக வீரராக களமிறங்கி இருந்தார். 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ்நாடு அணிக்காக முதல் தர மற்றும் லிஸ்ட் ஏ கிரிக்கெட்டில் விளையாடினார். தொழில்முறை கிரிக்கெட்டை பொறுத்தவரை, முரளி விஜய், கடைசியாக 2020ஆம் ஆண்டு ஐபிஎல் டி 20 கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார்.

முரளி விஜய் 61 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 38.28 சராசரியுடன் 3,982 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். இதில் 12 சதங்களும், 15 அரை சதங்களும் அடங்கும். அதேவேளையில் 17 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 339 ஓட்டங்களும், சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் 9 ஆட்டங்களில் 169 ஓட்டங்களும் சேர்த்தார்.

ஐபிஎல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தார். 2010ஆம் ஆண்டு சீசனில் அவர், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஒரு சதம், 2 அரை சதங்களுடன் 458 ஓட்டங்கள் வேட்டையாடினார். இதில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிராக விளாசிய 127 ஓட்டகளும் அடங்கும்.

ஓய்வு குறித்து 38 வயதான முரளி விஜய் கீச்சகப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், அனைத்து வகையிலான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்தும் நான் ஓய்வு பெறுகிறேன். கிரிக்கெட் உலகிலும் அதன் வணிகப் பக்கத்திலும் நான் புதிய வாய்ப்புகளை ஆராய்வேன். அங்கு நான் விரும்பும் விளையாட்டில் தொடர்ந்து பங்கேற்பேன், புதிய மற்றும் மாறுபட்ட சூழல்களில் எனக்கு நானே சவால் விடுத்துக்கொள்வேன். ஒரு கிரிக்கெட் வீரராக எனது பயணத்தின் அடுத்த படி இது என்று நான் நம்புகிறேன். மேலும் எனது வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை எதிர்பார்க்கிறேன் என்றார்.

# ரி20 போட்டிக்காக வெற்றிக்காக மோசமான பிட்ச் கேட்ட இந்தியா

*நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது ரி20 போட்டிக்கான லக்னோ பிட்ச் சென்னை -சேப்பாக்கம் பிட்சை விட பல மடங்கு தரமற்றதாக இருந்தது என்பது இப்போது சர்ச்சையாகியுள்ளது. முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இதுபோன்ற மோசமான பிட்ச் தயாரிக்கும்படி இந்திய கிரிக்கெட் சபையே நிர்ப்பந்தித்து என்பதே இப்போது சர்ச்சையாக மாறி இருக்கிறது.*

*இந்தப் பிட்சிற்கு முன்னதாக வேறு இரண்டு பிட்ச்களைத்தான் பிட்ச் தயாரிப்பாளர் தயாரித்திருந்தார். ஆனால், அணி நிர்வாகத்திடமிருந்து கடைசி நேர 'கோரிக்கை' எழுந்ததால் சிகப்பு மண்ணாகக் காட்சியளித்த ஆட்டம் நடைபெற்ற பிட்ச் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*முதல் ரி20 போட்டியில் தோல்வியுற்றதால் 2வது போட்டியில் எப்படியாவது வென்று தொடரை சமன் செய்ய வேண்டும் என்ற வெறியில் படுமோசமானகுழிப்பிட்சைப் போட வைத்துள்ளது இந்திய அணி நிர்வாகம் என்ற விமர்சிக்கப்படுகிறது.*

*ஆனால், அந்த பிட்சைப் போட்ட கியூரேட்டர் பின்னர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். எய்தவன் இருக்க அம்பை நோவதேன்? விமர்சிப்பவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.*

*சில நாட்களுக்கு முன்னதாகவே இரண்டு கருப்பு மண் பிட்சைத் தயாரித்துள்ளார் பிட்சைத் தயாரித்தவர். ஆனால் அது வேண்டாம், வேறு பிட்ச் வேண்டும் என்று அவருக்கு இந்திய அணி நிர்வாகம் நெருக்கடி கொடுத்து புதிய பிட்சை தயாரித்துள்ளனர் என்று முன்னணி ஆங்கில நாளேடு ஒன்று கூறியுள்ளது.*

*இப்போதுபழையபிட்ச்தயாரிப்பாளர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு புதிய பிட்ச் தயாரிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், 3வது ரி20 போட்டி நடைபெறும் அகமதாபாத் பிட்ச் எப்படி இருக்கப்போகிறதோ என்று நியூஸிலாந்து அணி கவலை கொண்டுள்ளது.*



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்;

# பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பான வழக்கு கல்முனையில் முடிவுறுத்தப்பட்டது!



(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பில் கைதான பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பான வழக்கு விசாரணை கல்முனை மேல் நீதிமன்றத்தில் இனிவரும் காலங்களில் விசாரணைக்கு எடுப்பதில்லை எனக் கூறி வழக்கு விசாரணை முடிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி வழக்கு விசாரணைக்காக கடந்த தவணையில் எடுக்கப்பட்ட வேளை பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணி கடந்த தவணையின் போது வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார்.

இதற்கமைய ஜனவரி மாதம் 26 ஆம் திகதி இந்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் வழக்கை நெறிப்படுத்திய அரச சட்டவாதி மன்றுக்குத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு விசாரணைக்கு இவ்வழக்கு எடுக்கப்பட்ட ஆவணங்கள் கல்முனை மேல் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து குறித்த வழக்கு தொடர்பில் கல்முனை மேல் நீதிமன்றத்தில் இதுவரை நடைபெற்ற விசாரணைகள் யாவும் முடிவுறுத்த இறுதி தீர்மானம் மன்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்களுடன் தொடர்புடைய சம்பவமாக கல்முனை – சாய்ந்தமருது பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற தற்கொலை குண்டுவெடிப்புக்கள் தொடர்பான விசாரணைகளில் பிரதான பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பிலான சாட்சிகளை மறைத்தமை தொடர்பில் அவரைக் கைது செய்ததாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர் அம்பாறை பொலிஸ் உப கராஜின் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# நிபந்தனைகளை ஏற்றால் போராட்டத்திற்கு ஆதரவு

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அறிவிப்பு

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்யும் பேரணி தொடர்பில் தமது கட்சியின் கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும்படி மாணவர்கள் தமது கட்சியிடம் கேட்டிருக்கிறார்கள் என்றபோதும்

கொள்கை ரீதியான சில விடயங்களுக்கு அவர்கள் இணங்கினால் தான் ஆதரவு வழங்குவோம் என்றார் அவர். மாணவர்கள் இணங்கி வராவிட்டால் வழமைபோன்று சிவில் அமைப்புக்களு டன் இணைந்து அன்றையதினம் போராட்டங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் ரிஷாட் யாழ்ப்பாணத்தில்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜன. 31



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் யாழ்ப்பாணத் திற்கு இன்று வருகை தந்தார்.

மீள்குடியேறிய முஸ்லீம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நோக்கில் அவரது பயணம் அமைந்தது. யாழ். நகரில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் ஐந்து சந்திப் பகுதியில் யாழ்ப்பாணம் கதீஜா மகா வித்தியாலயத்திற்கு சென்ற அவர் பாடசாலையின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

## பல்கலை மாணவர்கள்……

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

இலங்கையின் முதலாது பிரதமர் டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் கிழக்கு மாகாணத்தைத் தமிழ் மக்களின் மாகாணம் என்ற நிலையில் இருந்து மாற்றுவதற்காக 1949ஆம் ஆண்டே கல்லோயக் குடியேற்றத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அன்று தொடக்கம் மாறி மாறி இந்த நாட்டை ஆண்ட அசுகள் பல இனக்கலவரங்களை உருவாக்கி தமிழ் மக்களைக் கொன்றொழித்ததுள்ளன. இதுவே இந்த நாட்டில் தொடர் கதை.

மாகாணசபைத் தேர்தல் கிழக்கில் ஐந்து வருடங்களாகவும் வடக்கில் நான்கு வருடங்களாகவும் நடைபெறாமல் இருக்கின்றது. தற்போதைய அரசியற், பொருளாதாரச் சூழ்நிலையில் இலங்கை அரசிற்கு ஏற்பட்டிருக்கும் அழுத்தங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக இந்தியா முழு அழுத்தம் கொடுத்து வருகின்றது. அண்மையில் இலங்கை வந்த இந்திய அமைச்சரும் அதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

ஆனால், சிங்களப் பேரினவாத சக்திகள், குறிப்பாக விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற முன்னாள் அமைச்சர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று பொய்கூறி வருகிறார்கள்.

இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரமான தீர்வை எட்டாமல் இந்த நாடு உருப்படுவதற்கான எவ்வித சந்தர்ப்பமும் இல்லை. எனவே தமிழர்களாகிய எமக்கு கிடைக்காத சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டிய தேவை இல்லை. அந்த வகையில் வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்வரும் 4ம் திகதி வடக்கிலிருந்து கிழக்கிற்கு யாழ்ப்பாணத்தில இருந்து மட்டக்களப்பிற்கு நடத்த இருக்கும் கண்டனப் பேரணிக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும் – என்றார்




## கோம்பையன்மணல்……

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியங்கள் குறித்தும் பேசப்பட்டது.

எரியூட்டியை அங்கு மைத்தால் மேற்கொள்ள வேண்டிய தரக் கட்டுப்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் மக் களின் சம்மதத்தை அதற்குப் பெறு வது உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் இந்தச் சந்திப்பில் ஆராயப் பட்டன.

இத்தகைய எரியூட்டிகள் தொடர்பில் மக்களிற்குப் பலஐயங்கள் உண்டு அவற்றினையும் நீக்கி அப்பகுதி மக் களின் ஒத்துழைப்புடன் மட்டுமே அது அமைக்கப்பட வேண்டும் எனச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

இச் சந்திப்பில் மாநகர முதல்வர் இ.ஆனலட், ஆணையாளர் த.ஜெயசீலன் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2023 இல் வெளியிடப்பெற்றது.